**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**MCOP No: 56/2024**

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | அன்பழகன் |
| த.க.பெயர் | பெருமாள் |
| கிராமம் | செட்டிபட்டி |
| மாவட்டம் | சேலம் |
| வயது | 34 |

**ம.சா. 2 நாள் 28. 08.2025**

**முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் மனுதாரர்கள் தரப்பு சாட்சி. என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

**குறுக்கு விசாரணை (2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

எனது குடியிருப்பை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர்கள் அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்தில் இறந்த சங்கர் என்பவரை நான் பயணம் செய்தபோது பலமுறை அவரை பார்த்துள்ளேன், அந்த வகையில் அவரை எனக்கு தெரியும். அவரின் குடும்ப உறுப்பினர்கள் விவரம் எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. நான் அவரை மருத்துவமனைக்கு அனுப்பவில்லை, அங்கிருந்தவர்கள் அனுப்பினார்கள். நான் எங்கு பணி செய்கிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். டோல்கேட் க்கும் விபத்து நடந்த இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும். நான் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தின் பதிவெண் விவரத்தை நான் குறிப்பிடவில்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும்

விபத்தை பார்க்கவில்லை என்றும் மனுதாரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்து எனது அலைபேசி எண்ணை வாங்கி கொண்டனர். போலிசார் என்னை விசாரித்திருந்தால் வாக்குமூலம் பெற்றிருப்பார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை கடைபிடித்து வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரியல்ல. இறந்த போன சங்கர் தான் இரு சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி சென்று லாரியின் பின் இடது பக்க சக்கரத்தில் மோதி விபத்தை வரவழைத்துக் கொண்டார் என்றால் சரியல்ல. சங்கர் விபத்து சமயத்தில் தலைக் கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. இறந்தபோனவர் எனக்கு வேண்டியவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED Digitally signed by M ASHFAQ AHAMED
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS